Anusandhanvallari
Vol 2025, No.1
November 2025
ISSN 2229-3388

# Tholkappiya Gender Structure

J. Arul Marcia, Dr. A. Sundarave
PhD Researcher (Part-time) Assistant Professor
Department of Tamil Studies National College (Autonomous)
National College (Autonomous) Tiruchirappalli -1
Thiruchirappalli -1 Tiruchirappalli Bharathidasan
Thiruchirappalli Bharathidasan University Affiliated
University Affiliated

**Abstract:** Tholkappiyar's gender structure can be identified through the regulation of the nature of the leader and the leader in both the sciences of field and philosophy. Based on this, it is an attempt to examine whether the equality of men and women in ancient Tamil society was maintained or was seen to vary.

**Research Topic**

The research topic is to examine how the nature of the leader and leader is seen in the life of theft and chastity, the place of the leader in the social structure, and how the leader's right to speak is recognized.

**Objective of the Study**

The objective of the study is to examine whether the social structure and gender principles are given equally to both men and women.

**Hypothesis of the Study**

The hypothesis of the study is to examine whether the structure of the family is a root cause of female slavery and to create a living system that does not allow for any kind of disruptive activities.

**Research Scope**

The statements that take place in the life of theft and chastity in the ancient literature and similar literary evidence are taken as the research scope.

**Research Approach**

The study is handled in a feminist approach and the theories of men and women are approached as a descriptive study.


**Structure of the Study**

The study is structured into four parts, excluding the introduction and conclusion.

**Conclusion**

Thus, a broad-minded approach should be developed in a society where both men and women are included. Today's younger generation should be raised without discrimination and the idea of equality should prevail. A society that comes with an equal perspective should develop

Keywords: structure, slavery, feminist, perspective, develop.




Anusandhanvallari
Vol 2025, No.1
November 2025
ISSN 2229-3388

# தொல்காப்பியப் பாலினக் கட்டமைப்பு

ஆய்வாளர்
ஜே. அருள் மார்சியா
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
தமிழாய்வுத்துறை
தேசியக்கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி -1
திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது

நெறியாளர்
முனைவர் ஆ. சுந்தரவேல்
உதவிப் பேராசிரியர்
தேசியக்கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி -1
திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் களவியல், கற்பியல் என்ற இரு இயல்களிலும் தலைவன், தலைவியின் இயல்புகளை நெறிப்படுத்தியதன் வாயிலாக, பாலினக் கட்டமைப்பைக் கண்டறியலாம். இதனை அடிப்படையாகக் கொண்டு பண்டைய தமிழ்ச் சமூகத்தின் ஆண், பெண், சமத்துவம் நிலைநிறுத்தப்பட்டுள்ளதா அல்லது மாறுபட்டுக் காணப்படுகின்றதா என்பதை ஆராயும் முகமாக அமைகின்றது.

**ஆய்வுத்தலைப்பு**

களவு, கற்பு வாழ்முறைகளில் தலைவன், தலைவியின் இயல்பு எவ்வாறு காணப்படுகின்றது என்பதனையும், சமூகக் கட்டமைப்பில் தலைவனுக்குரிய இடத்தினையும், தலைவியின் பேச்சுரிமை, எங்ஙனம் அங்கீகரிக்கப்படுகின்றது என்பது குறித்தும் ஆராய்வதே ஆய்வுத் தலைப்பாக அமைந்துள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

சமூக அமைப்பு பால்விதிக் கோட்பாடுகள் இவை இரண்டும் ஆண், பெண் இருவருக்கும் சரிநிகர் சமானமாக வழங்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்வதே ஆய்வின் நோக்கமாக அமைகின்றது.

**ஆய்வின் கருதுகோள்**

குடும்பம் என்ற கட்டமைப்பு பெண்ணடிமைத்தனம் வேரூன்றக் காரணியாகின்றதா என்பது பற்றியும், சீர்குலைக்கும் எவ்வகையான செயல்களுக்கும் இடமளிக்காது வாழும் அமைப்பினை உருவாக்குவதாக அமைவதே ஆய்வின் கருது கோளாகின்றது.

**ஆய்வு எல்லை**

தொல்காப்பிய பொருளதிகாரத்தில் இடம் பெற்றுள்ள களவு, கற்பு வாழ்வில் நடைபெறும் கூற்றுகளும்,அதனைப் போன்று இலக்கியச் சான்றுகளையும் ஆய்வு எல்லையாகக் கொள்ளப்படுகிறது.

Anusandhanvallari
Vol 2025, No.1
November 2025
ISSN 2229-3388

**ஆய்வு அணுகுமுறை**

பெண்ணியம் சம்பந்தமான அணுகுமுறையில் ஆய்வானது கையாளப்பட்டு, ஆண் பெண் கோட்பாடுகளையும் விளக்கமுறை ஆய்வாக அணுகப்பெற்றுள்ளது.

**ஆய்வின் அமைப்பு**

ஆய்வின் முன்னுரை, முடிவுரை நீங்கலாக நான்கு பகுதிகளாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

இவ்வாறாக விரிந்த மனப்பான்மையுடன் நோக்குகின்ற போக்கானது ஆண் பெண் இருவரும் இணைந்த சமூகத்தில் உருவாக வேண்டும். இன்றைய இளைய தலைமுறையினரை பாகுபாடின்றி வளர்த்து, சமத்துவ எண்ணம் மேலோங்கிட உதவ வேண்டும். சமமாக நோக்கும் மனப்பான்மையில் வரும் சமூகம் வளர்ச்சி பெற வேண்டும்.

## தொல்காப்பிய பாலினக் கட்டமைப்பு

ஆய்வாளர்
ஜே. அருள் மார்சியா
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
தமிழாய்வுத்துறை
தேசியக்கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி -1
திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது

நெறியாளர்
முனைவர் ஆ. சுந்தரவேல்
உதவிப் பேராசிரியர்
தேசியக்கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி -1
திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது

தொல்காப்பிய தமிழ்ச் சமூகம் பொற்காலமாகத் திகழ்ந்துள்ளதை சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. அது போன்றே தொல்காப்பியரின் பொருளதிகாரத்தில் களவியல், கற்பியல் பகுதிகளில் அதிகமாக தலைவன் தலைவி பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அக்குறிப்புகள் பண்டைத் தமிழரின் சமூக அமைப்பில் ஆண் பெண் நிலைப்பாட்டினையும் அதன் வழி பாலினக் கட்டமைப்பினையும் பதிவு செய்துள்ளதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தொல்காப்பியம் சுட்டும் ஆண் பெண் பண்புநலன்கள்**

காதல் என்னும் களவொழுக்கத்தினைப் பற்றி கூறும் தொல்காப்பியர். அவற்றின் இயல்பினையும் இங்கே புலப்படுத்துகின்றார்.

”காமக் கூட்டங் காணுங் காலை

மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்

துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே”

(தொ.பொ.159)

இன்பம், பொருள், அறன் என்ற அன்போடு புணர்ந்த காமக் கூட்டத்தில் அன்புடையார் எல்லாம் நிகழ்த்தும் அன்பினைப் புலப்படுத்துவதாகக் களவியலைத் தொடங்குகின்றார். மனமொத்த காதலில் இருவரும் திளைப்பர்.

ஆண்பால், பெண்பால் இரண்டிற்கும் உரிய இயல்புகளைச் சுட்டுவதோடு பால்விதிக் கோட்பாடு என்ற சமூகக் கட்டமைப்பினைக் காண முடிகிறது. இயற்கைப் புணர்ச்சியினை நாள்தோறும் நிகழ்த்த வேண்டும் என்ற வேட்கையினால் தலைவன் நாள்தோறும் தலைவியைச் சென்றடைவான்.

”பெருமையும் உரனும் ஆடூஉ மேன”

(தொ.பொ.96)

அறிவும், ஆற்றலும், புகழும், துணிவும் ஆண்மகனுக்குரிய பண்பாகக் கூறியுள்ளதோடு, மகளுக்குரிய இயல்பினை இவ்வாறாக வெளிப்படுத்துகின்றார்.

”அச்சமும் நாணும் மடனும் முண்டுறுத்த

நிச்சமும் பெண்பாற்குரிய வெண்ப”

(தொ.பொ.97)

அச்சம், நாணம், மடன் என்ற முப்பண்புகள் தான் பெண்களுக்கு, எத்தகு காலத்தும் காணப்பட வேண்டும் என்று விடுவிக்கின்றார். இதனைப் போன்றே இலக்கியங்களும் சான்று பகர்கின்றன.

”ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே

………………………………………………………………………

களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

(புறநானூறு 312)

ஒரு பெண்ணுக்குரிய கடமை ஆண் மகவைப் பெற்றுத் தருவது தான், அவனைச் சான்றோனாக உருவாக்குவது தந்தையின் கடமையாகக் கொள்ளப்படுகிறது. களிறு போன்று வீரத்தினை உடையவனாக மகனானவன் பார்க்கப் படுகின்றான். இதன் வழி ஒரு பெண் போகப் பொருளாகவும், அறியாமையோடும் வாழத்தான் பணிக்கப்படுகின்றாள். அது மட்டுமன்றி அறியாமை எண்ணம் தான் பெண்ணின் உயரிய பண்பாகவும் கருதப்பட்டது.

பெண்ணின் சுதந்திரமான கருத்து, சிந்தனை, பேச்சு, செயல், உணர்வு இவை அனைத்தையும் கட்டுப்படுத்தி வாழ வேண்டும் என்பதே பெண்ணடிமைத் தனத்தின் ஆரம்பப் புள்ளியாகின்றது. அவ்வாறு உருவாக்கப்பட்ட கட்டமைப்புத்தான் இன்று வரையிலும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. அறியாமையோடு வாழ எண்ணும் பெண்களைத்தான் ஆண் சமூகமும் ஏற்கும் நிலையிலுள்ளது. அதற்கு மாறாக சிந்திக்கின்றது. பெண்களை சமூகம் மாற்றுக் கண்ணோட்டத்தில் காண்கிறது.

**காதல் கொண்ட குறியிடம்**

தலைவன் தலைவி இருவரிடத்தும் நிகழ்ந்த அன்பின் பரிமாற்றங்களால் ஒருவரை ஒருவர் பிரிய மணமில்லாமல தவிப்பர். தலைவியைக் காண வேண்டும் என்று தலைவனும், தலைவனைக் காண வேண்டுமென்று தலைவியும் குறிப்பிட்ட ஒரு இடத்தில் நாள்தோறும் கூடி மகிழ்வர்.

அவ்வாறு பகலிலும், இரவிலும் ஒருவரையொருவர் காண்பதற்கு ஆவல் கொண்டிருப்பர். அதில் தலைவன் பகற்குறி, இரவுக்குறி இரண்டிற்கும் செல்ல அனுமதி உண்டு. ஆயின் தலைவி பகலில் பகலில் மட்டும் தான், யாரும் அறியா வண்ணம் தலைவனைக் காண இயலும்.

இரவுக்குறியில் செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருக்கும். அக்காதற் குறிப்புகளையும் தலைவன் தான் முதலில் வெளிப்படுத்த வேண்டும் என்ற விதிமுறையுண்டு.

”இருவகைக் குறிபிழைப் பாகிய இடத்தும் .........”

(தொ.பொ.106)

இங்கு தலைவியை விட தலைவனுக்குத்தான் பேச்சுரிமை வழங்கப்பட்டிருக்கும். தலைவிக்கு அவள் எண்ணங்கள் வெளிப்படுத்தும் இடமும் குறைவாகவே காட்டப்பெறும்.

**மடலேறுதல்**

‘திரைகடல் ஓடியும் திரவியம் தேடு‘ என்ற முதுமொழியானது தலைவன் கடல் கடந்து சென்றாயினும் பொருளீட்ட வேண்டும். அது தலைவனின் தலையாயக் கடமையாகக் கூறப்பெறுகிறது. அத்தலைவன் மீண்டும் வரும் வரையிலும் தலைவனை மட்டுமே எண்ணி வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என்ற கருத்து புகுத்தப்படுகின்றது. அவ்வாறு செல்லும் தலைவனோடு தலைவி செல்லும் உரிமை இல்லை என்பதையும் தெளிவுபடுத்தி இருப்பர்.

தலைவி, தலைவனுடன் இன்புற்று வாழ்ந்த வாழ்வியலை கற்பியல் வழியே புகுத்த எண்ணுகின்றாள். தன் எண்ணங்களை வீட்டிலுள்ளோர்ருக்கு தெரியப்படுத்தியும் தலைவனைக் கைகூடும் வழி இல்லாது, மடலேறியாவது தெரியப்படுத்தலாம் என்றாலும், அவளுக்கு அவ்வுரிமை வழங்கப்படவில்லை.

"எத்துணை மருங்கினும் மகடூஉ மடல் மேல்

பொற்புடை நெறியை இன்மை யான"

(தொ.பொ.35)

இவ்வாறாக மகளிர் மடலேறுதல் வழக்கில் இல்லை என்றதோடு, அது மகளிர்க்குரிய கற்பும் இல்லை என்பதாக குறிப்பிடுகின்றார். தலைவன் தன் எண்ணங்களை ஊரறிய பறைசாற்றும் உரிமைகள் வழங்கப்படும் பொழுது, தலைவிக்கு மறுக்கப்படுகிறது. தலைவனுக்காக மடலேறுதல் என்பது இழிவான ஒன்றாக கருதப்பட்டது. தலைவிக்கு மட்டும் தான் இவ்வகையான களவுப்பொருளை தொல்காப்பியர் உரித்தாக்குகின்றார்.

"உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்

செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்

தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு

காமக் கிழவன் உள்வழிப் படினும்

தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்

ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே"

(தொ.பொ.112)

நாணத்தை அடிப்படையாகக் கொண்ட கற்புதான் சிறந்தது என்றும், வருத்தம் விளைவிக்கக் கூடியச் சொற்களைக் கூற வேண்டாமென்றும் தலைவிக்குக் குறிப்பிடப்படுகிறது. ஆயின் அதே வேளையில் தலைவனுக்கு இத்தகு குணங்கள் கூறப்பெறவில்லை. அறிவு, ஆற்றல், துணிவு என்ற இயல்பினை உடையவனுக்கு கோபம் என்பது உரிய ஒன்றாகக் கருதப்படுகின்றது. ஆதலால் தான் நற்சொற்களை அவர்கள் கூற முடிந்தாலும் தலைவனானவன் கூறியே ஆக வேண்டும் என்ற நியதி இல்லை.கற்பியல் வாழ்வு

கற்பு என்பது ஒழுக்கத்தை உணர்த்துவதாக அமைகின்றது. கற்பு பெண்ணுக்குரியதாக மட்டும் கற்பிக்கப்பட்டதால், ஆணாதிக்க சமூகம் கற்பின் பெயரால் உருவாக்கிய கதைகள் ஏராளம் உண்டு. கற்பு என்பது மனித இனம் முழுமைக்கும் உரியது. பெண்களை அடிமைப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தினால் மட்டுமே கற்பானது பெண்ணுக்குரியதாக கருதப்பட்டதாக எண்ணப்படுகின்றது.

‘கல்‘ என்ற வினையின் அடியாகத் தோன்றியது தான் கற்பு. இதற்கு கற்றல் என்ற பொருளுண்டு. களவு வாழ்வில் தம் எண்ணங்களையும், இன்பங்களையும் ஒன்றாகப் பகிர்ந்து கொண்ட தலைமக்கள், வரைந்து கொள்ளுதலான கற்பு நெறிக்கு

ஆட்படுகையில் இல்லறம் இனிதாகின்றது. ஆயின் திருமண வாழ்வில் ஆணுக்குரிய கூற்று அதிகமாகவும், பெண்ணுக்குரிய கூற்று குறைவாகவும் கருதப்படுகிறது. களவில் தலைவியானவளுக்கு பேசும் உரிமை, கற்பு வாழ்வில் குறைக்கப்படுவது சமூகக் கட்டமைப்பின் வடிவாகக் கருதப்படுகிறது.

“காமக் கடப்பினுட் பணிந்த கிளவி

காணுங் காலைக் கிழவோற் குறித்தே

வழிபடு கிழமை அவட்கிய லான“

(தொ.பொ.159)

என்பதாகக் கூறிய தொல்காப்பியர், அன்பு மிகுதியில் தலைவன் தலைவியைப் போற்றுகின்றான் என்பதாகக் குறிப்பிடுகின்றார். தன்னுடைய காம வேட்கையினைத் தணித்துக் கொள்ள வேண்டும் என்ற காரணத்தினால் மட்டுமே பணிந்து பேசுவான். மாறாக பிற இடங்களில் கற்பு காலத்தில் அன்பு மிகுதியால் பேசுவதாகக் குறிக்கப்பட வில்லை.

“தாய்போல் கழறித் தழீஇக் கோடல்

ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப

கவவொடு மயங்கிய காலை யான“


(தொ.பொ.172)

தலைவன் பரத்தையிடத்து செல்கின்ற அளவிற்கு தவறு செய்த போதிலும், தலைவி தாய் போல் தலைவனை தழுவிக் கொள்ள வேண்டும். தலைவன் மீது எத்தகு நிலையிலும் கோபம் கொள்வது கூடாது. வெறுப்பினை உமிழவும் கூடாது. தன்னுடைய சிந்தனைகள் எண்ண ஓட்டங்கள் அனைத்தும் தலைவனானவன் திரும்பி வர வேண்டும் என்பதிலேயே இருக்க வேண்டும். என்பதாகக் கூறப்படுகிறது.

போர்ப் பாசறைக்கு தலைவியை அழைத்துச் செல்லும் அனுமதியில்லை. போர் தீ தொழில் புரியும் தலைவனை விட, தன்னுடைய மகன், தலைவன் இருவருக்கும் போரில் என்ன நிகழ்ந்தாலும் அதனை ஏற்கும் மனவலிமையோடு அவர்களை களத்திற்கு அனுப்பி வைக்கும் தலைவியின் தன்மை சிறந்ததாகக் கருதப்படுகிறது.

அதிதிறன் உடையவர்களாக காணப்பெறினும் தலைவனைச் சுற்றியே அவளது உலகம் சுருங்கி விடுகின்றது. இத்தகு கட்டமைப்புகள் அனைத்தும் வளர்ந்த நிலையிலுள்ள இன்றைய சூழலிலும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது என்பதுதான் மறுக்க முடியாத உண்மை.

**முடிவுரை**






உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்று மொழியின் வகைகளை இரண்டாகப் பகுத்து கூறுவது போன்று, தலைவன் தலைவியின் இருவகை சொல்லாடல்கள் வாயிலாக ஆணுக்குரிய கட்டமைப்பினையும், பெண்ணுக்குரிய கட்டமைப்பினையும் பார்க்க முடிகிறது. தன்னையே அடக்கி ஆளும் வலிமை இருப்பதனால் தான், குடும்ப அமைதி சீர்குலையாமல காணப்பெறுகின்றது.

இல்லறத்தை இனிமையானதொரு வழியில் கொண்டு செல்லும் வழிமுறைகளைக் கையாண்டக் காரணத்தினால் தான், சமூகம் என்ற அமைப்பு இன்று வரையிலும் பெரிதாகப் பார்க்கப்படுகின்றது. இதற்கு தொல்காப்பியர் கூறிய நூற்பா நமக்கு கொடுக்கும் செய்திகளின் வாயிலாக இதனை அறிய வாய்ப்பாகிறது.

துணை நூற் பாட்டியல்

1. தொல்காப்பியம் மூலமும் உரையும் – முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணி
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்

2. புறநானூறு மூலமும் உரையும் – முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணி
புத்தகம் 1 – முனைவர் அ.விசுவநாதன்
முனைவர் வி. நாகராசன்
முனைவர் இரா. ஆரோக்கியசாமி
முனைவர் க.திலகவதி
முனைவர் வெ.சத்தியநாராயணன்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்

3. தமிழ்மொழி இலக்கிய வரலாறு – மா. இராசமாணிக்கனார்.
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்